13.11.2024 ம.சா1 இசக்கி Mcop 319 of 2021

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு 3ம்எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

தற்போது நான் இலஞ்சியில் தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். நான் பால் மாடுகள் வளர்த்து பால் வியாபாரம் செய்து மாதம் ரூ.30,000/-ம்சம்பாதித்ததாக சொல்வது வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. என் வருமானத்தை காட்டக்கூடிய ஆவணம்தாக்கல் செய்யவில்லை என்றால் பால் வியாபாரம் செய்தேன். நான் இலஞ்சி டூ குற்றாலம் மெயின்ரோட்டில் தெற்கில்இருந்து வடக்கு நோக்கி மாடு மேய்த்து கொண்டிருந்த போது தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். இரண்டு மாடுகள் மற்றும் 3 ஆடுகள் முன்னால் போய் கொண்டிருந்தது நான் பின்னால் சென்று கொண்டிருந்தேன் என்றால் சரிதான். நான் திடீரென வலதுபுறமாக சாலையை கடக்க முயன்றதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. என் மீது மோதிய ஆட்டோ மாடு மற்றும் ஆடு மீது மோதவில்லை என்றால் சரிதான். நான்தான் ஆட்டோவை கவனிக்காமல் சாலையை அவசமாக கவனக்குறைவாக கடந்த போது தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயம் குணமாகிவிட்டது என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயம் சிறுகாயம் என்றாலும் நான் வழக்கிற்காக காயத்தை மிகைப்படுத்தி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்து அன்று ஆட்டோவை ஒட்டிவந்த 1ம்எதிர்மனுதாருக்கு ஒட்டுனர் உரிமம் இல்லாததால் 3ம்எதிர்மனுதாரர் எனக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. எனக்கு 1,2 எதிர்மனுதாரர்கள் மட்டும் தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகமானது என்றாலும் அது சட்ட அடிப்படையற்றது என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ13 வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 3ம்எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.